compose.kerala.gov.in
egazette.kerala.gov.in
printing.kerala.gov.in

Regn.No. KERBIL/2012/45073
dated 2012-09-05 with RNI
Reg No.KL/TV(N)/634/2021-2023

കേരള സർക്കാർ
GOVERNMENT OF KERALA

കേരള ഗസറ്റ്
KERALA GAZETTE

ആധികാരികമായി പ്രസിദ്ധപ്പെടുത്തുന്നത്
PUBLISHED BY AUTHORITY

ചൊവ്വ, 2026 മെയ് 12
Tuesday, 12th May 2026

1201 മേടം 29
29th Medam 1201

1948 വൈശാഖം 22
22nd Vaisakha 1948

വാല്യം **15**
Vol. XV

നമ്പർ **19**
No.

Part I -Section (iii)

Law Department

©
കേരള സർക്കാർ
GOVERNMENT OF KERALA
2026

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

கேரள அரசு

சட்ட (சட்டமியற்றல் - எ) துறை

அறிக்கை

எண்:29/ச.இ.எ 1/2026/சட்டம். திருவனந்தபுரம், 2026 மார்ச் 9

1201 கும்பம் 25

1947 பால்குனம் 18

கேரள மாநில சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டம் பொதுமக்களின் அறிவிற்காக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட மசோதாவிற்கு 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7-ஆம் தேதி ஆளுநரின் அனுமதி கிடைக்கப்பெற்றது.

ஆளுநரின் ஆணைப்படி

கெ.ஜி. சனல் குமார்,

சட்ட செயலாளர்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

2026-ன் 6-வது சட்டம்

2026-ன் அப்காரி (திருத்த) சட்டம்

1077-ன் அப்காரி சட்டத்தை மீண்டும் திருத்தம் செய்வதற்கான

ஒரு

சட்டம்

முன்னுரை.- 1077-ன் அப்காரி சட்டம் (1077-ன் 1) இதற்குப் பின் தோன்றும் தேவைகளுக்காக மீண்டும் திருத்தம் செய்வது உகந்ததாக இருப்பதாலும்;

இந்தியக் குடியரசின் எழுபத்து ஏழாம் ஆண்டில் பின்வரும் படியாக சட்டம் இயற்றப்படுகிறது:

1. சுருக்கத் தலைப்பு மற்றும் தொடக்கம்.- (1) இந்தச் சட்டம் 2026-ன் அப்காரி (திருத்த) சட்டம் என அழைக்கப்படலாம்.

(2) இது உடனடியாக அமலுக்கு வருவதாகும்.

2. பிரிவு 29-க்கான திருத்தம்.- 1077-ன் அப்காரி சட்டத்தில் (1077-ன் 1)பிரிவு 29, துணைப்பிரிவு (2)-ன் உட்பிரிவு (எ)-ல் ''ரொட்டி'' என்ற சொல்லுக்கு பிறகு, ''வினாகிரி ஆகியவற்றின்'' என்ற சொற்கள் சேர்க்கப்பட வேண்டும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

கேரள அரசு

சட்ட (சட்டமியற்றல் -பி) துறை

அறிக்கை

எண்:106/ச.இ.பி 1/2025/சட்டம். திருவனந்தபுரம், 2025 நவம்பர் 1
1201 துலாம் 15
1947 கார்த்திகம் 10

கேரள மாநில சட்டமன்றப்பேரவையின் பின்வரும் சட்டம் பொதுமக்களின் அறிவிற்காக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது. சட்டமன்றப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட மசோதாவிற்கு 2025-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30-ஆம் தேதி ஆளுநரின் அனுமதி கிடைக்கப்பெற்றது.

ஆளுநரின் ஆணைப்படி
கெ.ஜி.சனல் குமார்,
சட்டச்செயலாளர்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

2025-ன் 12-வது சட்டம்

2025-ன் கேரள பொது சேவை உரிமைச் சட்டம்

தகுதியுடைய நபர்களுக்கு குறிப்பிட்ட நேரத்திற்குள் பொது சேவைகளை வழங்குவதற்கும், தவறு ஏற்படும் பட்சத்தில் அரசு ஊழியர்களைப் பொறுப்பேற்கச் செய்வது உள்பட அது தொடர்பாகவும் அதற்கு தொடர்புடைய விஷயங்களுக்காகவும் ஏற்பாடு செய்வதற்கான

ஒரு

சட்டம்

முன்னுரை.- தகுதியுடைய நபர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட காலகெடுவிற்குள் பொது சேவைகளை வழங்குவதற்கும், தவறு ஏற்படும் பட்சத்தில் அரசு ஊழியர்களைப் பொறுப்பேற்கச் செய்வதற்கும், அது தொடர்பானதும் அதற்கு தொடர்புடையதான விஷயங்களுக்காக ஏற்பாடு செய்வது உகந்ததாக இருப்பதாலும்;

இந்தியக் குடியரசின் எழுபத்து ஆறாம் ஆண்டில் பின்வரும்படியான சட்டம் இயற்றப்படுகிறது:-

1. சுருக்கத்தலைப்பும் தொடக்கமும்.- (1) இந்த சட்டத்தை 2025-ன் கேரள பொது சேவை உரிமைச் சட்டம் என அழைக்கப்படலாம்.

(2) இது உடன் அமலுக்கு வரும்.

2. வரையறைகள்.- இந்த சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையில் தேவைப்படாத பட்சம்,-

(எ)''ஆணையம்'' என்றால் பிரிவு 10-ன் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ள ஆணையம் எனப் பொருள்படும்;

(பி) ''நாட்கள்'' என்றால் தொடர்புடைய பொது அதிகார அமைப்பின் வேலை நாட்கள் எனப் பொருள்படும்;

(சி) ''நியமிக்கப்பட்ட அதிகாரி'' என்றால் பிரிவு 4-ன் அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஒரு அதிகாரியைக் குறிக்கும்;

(டி) ''மின்னணு முறை'' என்பது எந்தவொரு சேவையையும் மின்னணு முறையில் வழங்குவதற்கான எந்தவொரு அமைப்பு, செயல்முறை அல்லது பயன்பாட்டைக் குறிக்கிறது. அதில் அரசிடமிருந்து அரசுக்கு அல்லது அரசிடமிருந்து குடிமகனுக்கு அல்லது அரசிடமிருந்து வணிக பரிவர்த்தனைகளுக்கு, தரவு பரிமாற்றம் மற்றும் பிற டிஜிட்டல் விநியோக பரிவர்த்தனைகள் அவை மின்னஞ்சல், மொபைல் சேவைகள், கிளைவுட் கம்ப்யூடிங், ஆவண மேலாண்மை, குரல் அல்லது தரவு

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

பரிமாற்றம் வாயிலாகவோ வேறு ஏதேனும் வகையில் நடத்தப்பட்டதால், உட்படுவதும் ஆனால் அவற்றில் மட்டுமே வரையறுக்கப்படாததாகும்;

(இ) ''மின்னணு முறையில் சேவைகளை வழங்குதல்'' என்றால் சேவைகளை மின்னணு முறையில் வழங்குவதைக் குறிக்கிறது;

(எஃப்) ''தகுதியுள்ள நபர்'' என்றால் இந்த சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட சேவையைப் பெறுவதற்கு தகுதியான நபர் எனப்பொருள்படுவதும் அதில் அவ்வாறு தகுதியுடைய நபர் முறையே எழுத்துபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட நபரையும் உள்ளடக்குவதுமாகும்;

(ஜி) ''முதல் மேல்முறையீட்டு அதிகாரி'' என்றால் பிரிவு 4-ன் அடிப்படையில் அறிவிக்கப்பட்ட ஒரு அதிகாரி எனப்பொருள்படும்;

(எச்) ''அரசு'' என்றால் கேரள அரசு எனப்பொருள்படும்;

(ஐ)''துறைத் தலைவர்'' என்றால் அரசாங்கச் செயலாளர், இயக்குநர், ஆணையர், பதிவாளர் அல்லது ஒரு அரசு நிறுவனத்தின் பொறுப்பை வகிக்கும் வேறு ஏதேனும் அதிகாரி எனப்பொருள்படும்;

(ஜெ) ''அறிவிப்பு'' என்றால் அதிகாரப்பூர்வ அரசு இதழில் வெளியிடப்பட்ட அறிக்கை எனப்பொருள்படும்;

(கெ) ''பரிந்துரைக்கப்பட்ட'' என்றால் இந்த சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளால் பரிந்துரைக்கப்பட்ட எனப்பொருள்படும்;

(எல்) ''பொது ஆணையம்'' என்றால்,-

(i) அரசியலமைப்பின் மூலம் அல்லது அதன் கீழ்;

(ii) பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட வேறு எந்தச் சட்டத்தின் மூலமும்;

(iii) மாநில சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட வேறு எந்த சட்டத்தின் மூலமும்;

(iv) அரசு வெளியிட்டுள்ள அறிக்கை அல்லது உத்தரவு மூலம் நிறுவப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட எந்தவொரு அதிகார இடம் அல்லது அமைப்பு அல்லது உள்ளாட்சி நிறுவனம் என்றும்,-

(எ) அரசாங்கத்தால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழங்கப்படும் நிதியால் அரசுக்கு சொந்தமானதோ கட்டுப்பாட்டில் உள்ளதோ அல்லது கணிசமான பொருளுதவி வழங்கப்பட்டுள்ளதோ ஆன ஏதேனும் அமைப்பு;

(பி) அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படும் பொது சேவையை வழங்க வேண்டிய வேறு எந்தவொரு அமைப்பும் எனப்பொருள்படும்;

(எம்) ''பொது சேவை'' என்றால் அரசு, மின்னணு முறையில் வேறு ஏதேனும் முறையில் வழங்கும் பொது சேவை எனப்பொருள்வதும் அதில் இந்த சட்டத்தின் பிரிவு 4-ன் அடிப்படையில் தொடர்புள்ள துறையால் அறிவிக்கப்பட்டுள்ள சேவைகள் உட்படும்;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(என்) ''சிறப்பு பொதுச்சேவை'' என்றால் சட்டத்தின் பிரிவு 5-ன் துணைப்பிரிவு (6)-ன் நோக்கங்களுக்காக பிரிவு 4-ன் அடிப்படையில் தொடர்புடைய பிரிவு அறிக்கை செய்யப்பட்டுள்ள சேவைகள் எனப்பொருள்படும்;

(ஒ) ''மாநிலம்'' என்றால் கேரள மாநிலம் எனப்பொருள்படும்;

(பி)'' இரண்டாவது மேல்முறையீட்டு அதிகாரி'' என்றால் பிரிவு 8-ன் நோக்கங்களுக்காக தொடர்புடைய நிர்வாகத் துறையால் அறிவிக்கப்பட்ட இணைச்செயலாளர் பதவிக்கு குறையாத ஒரு அதிகாரியைக் குறிக்கிறது;

(க்யூ)''நிர்ணயிக்கப்பட்ட கால வரம்பு'' என்றால் நியமிக்கப்பட்ட அதிகாரியால் சேவையை வழங்குவதற்காக இந்த சட்டத்தின் பிரிவு 4-ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கால வரம்பு எனப்பொருள்படும்;

3. பொது சேவைகள் பெறுவதற்கான உரிமை:- இந்த சட்டத்தின் விதிகளுக்கு பிரிவு 4-ன் அடிப்படையில் அறிவிக்கப்பட்ட சேவைகள் குறிப்பிட்ட காலவரம்பிற்குள் கிடைப்பதற்கு தகுதியுடைய ஒவ்வொரு நபருக்கு உரிமை உண்டு.

4. பொது சேவைகள், சிறப்பு பொது சேவைகள், நிர்ணயிக்கப்பட்ட காலவரம்பு, நியமிக்கப்பட்ட அதிகாரிகள் போன்றவற்றை அறிவிப்பதற்கான அதிகாரம்.- ஒவ்வொரு துறை அதிகாரியும், இந்த சட்டத்தின் ஆரம்ப தேதி முதல் ஆறு மாதங்களுக்குள், அவர் வழங்கும் பொது சேவைகள், சிறப்பு பொது சேவைகள், நிர்ணயிக்கப்பட்ட காலவரம்பு நியமிக்கப்பட்ட அதிகாரி மற்றும் முதல் மேல்முறையீட்டு அதிகாரி ஆகியவை இந்த சட்டத்தின் நோக்கத்திற்காக அறிக்கை செய்ய வேண்டியதும், புதிதாக வழங்கவிருக்கும் சேவைகள் அவை வழங்க முடிவெடுத்த தேதி முதல் ஆறு மாத காலத்திற்குள் அறிக்கை செய்ய வேண்டியதாகும்.

(2) துணைப்பிரிவு (1)-ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொதுசேவையை வழங்குவதற்காக அரசு, அறிக்கை வாயிலாக, கிராமம், தாலுகா, மாவட்டம், துறை அளவில் அல்லது வேறு ஏதேனும் பொருத்தமான தலத்தில் வெவ்வேறு பொது சேவைகளை வழங்க வெவ்வேறு அலுவலர்களை நியமிக்கலாம். அவர் அத்தகைய ஒவ்வொரு சேவையையும் தகுதியுடைய நபருக்கு வழங்க பொறுப்புடையவராவர்.

5. நிர்ணயிக்கப்பட்ட கால வரம்பிற்குள் பொது சேவை வழங்குதல்.- (1) நியமிக்கப்பட்ட அதிகாரி, தகுதியுடைய நபருக்கு பிரிவு 4-ன் உட்பிரிவு (1)-ன் கீழ் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடியான அத்தகைய காலவரம்பிற்குள், பொதுச்சேவை வழங்க வேண்டியதாகும்.

(2) நிர்ணயிக்கப்பட்ட கால வரம்பிற்குள், பொது சேவைக்காக அனைத்து வகையிலும் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட ஒரு விண்ணப்பம் நியமிக்கப்பட்ட அதிகாரி அல்லது அத்தகைய விண்ணப்பத்தை பெற அங்கீகரிக்கப்பட்ட துணை

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அதிகாரியிடம் நிர்ணயிக்கப்படும் படியான முறையில், சமர்ப்பிக்கப்பட்ட தேதி முதல் தொடங்குவதாகும்.

(3) ஒவ்வொரு நியமிக்கப்பட்ட அதிகாரியும், பொது சேவைக்காக விண்ணப்பித்ததோ அதை வழங்கவோ அல்லது நிராகரிக்கப்பட்டதோ ஆன விண்ணப்பங்கள் மற்றும் அது தொடர்பான ஆவணங்கள், அதது சங்கதிபோல், நிர்ணயிக்கப்படும்படியான முறையில், குறிப்பாக மின்னணு வடிவத்தில் பராமரிக்க வேண்டும்.

(4) நியமிக்கப்பட்ட அதிகாரியால் பெறப்பட்ட அனைத்து விண்ணப்பங்களும் விண்ணப்பம் பெறப்பட்ட தேதியை குறிப்பிட்டு ஒப்புகை ரசீது வழங்க வேண்டியதும் ஆன் லைனாக விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் விஷயத்தில், தானியங்கி ஒப்புகை ரசீது உருவாக்கப்பட்டு வழங்க வேண்டும்.

(5) விண்ணப்பம் பெறப்பட்ட உடனேயே, நியமிக்கப்பட்ட அதிகாரி நிர்ணயிக்கப்படும் படியான முறையில் அதில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதும் நிர்ணயிக்கப்பட்ட கால வரம்பிற்குள் பொது சேவையை வழங்கவோ அல்லது விண்ணப்பத்தை நிராகரிக்க வேண்டியதாகும்:

ஆனால், விண்ணப்பம் நிராகரிக்கும்பட்சம், நியமிக்கப்பட்ட அதிகாரி அதற்கான காரணங்களைப் பதிவு செய்து விண்ணப்பத்தாரரை தெரிவிக்க வேண்டும்.

(6) சிறப்பு பொது சேவைகள் குறிப்பிட்ட கால வரம்பிற்குள் விண்ணப்பதாரருக்கு வழங்கப்படாத்த பட்சத்தில், குறிப்பிட்ட கால வரம்பு முடிவடைந்த ஐந்து நாட்களுக்குள் மேற்கூறிய சேவை வழங்கியுள்ளதாக கருதப்பட வேண்டியதாகும். அத்தகைய சூழலில் நியமிக்கப்பட்ட அதிகாரியில் இருந்து விண்ணப்பதாரருக்கு தேவையான ஆவணங்கள் மின்னணு வடிவத்திலோ அல்லாமலோ வழங்குவதற்கான அமைப்பு ஒவ்வொரு துறை தலைவரும் ஏற்படுத்த வேண்டியதாகும்:

ஆனால் அத்தகைய ஒரு சேவையைப் பெறுவதற்காக அனைத்து வகையிலும் முழுமையான ஒரு விண்ணப்பம் தொடர்பான ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டியதாகும்.

6. மின்னணு முறையில் வழங்கக் கூடிய சேவைகள்.- அனைத்து பொது அதிகார இடங்களும் சட்டபூர்வமாகவும் தொழில்நுட்ப மற்றும் நிதி சாத்திய கூறுகளுக்கு உட்பட்டு,-

(i) மின்னணு முறையில் வழங்க முடியாததும்,

(ii) மின்னணு முறையில் வழங்க சாத்தியமானதும் ஆனால் குறிப்பிட்ட காரணங்களுக்காக அத்தகைய சேவைகளை மின்னணு முறையில் வழங்க வேண்டியதில்லை என்று அரசு அறிவித்துள்ளதும்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

ஆன சேவைகள் அல்லாத, அனைத்து பொது சேவைகளும் இந்த சட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல், அரசு அறிக்கை வெளியிடக்கூடிய காலவரம்பிற்குள் மின்னணு முறையில் வழங்க வேண்டியதாகும்.

(2) ஒவ்வொரு பொது அதிகாரியும், இந்த சட்டம் தொடங்கிய நாளிலிருந்து ஆறு மாதத்திற்குள் மின்னணு முறையில் வழங்க வேண்டிய பொது சேவைகளின் ஒரு அட்டவணையை வெளியிட வேண்டியதும், மேற்கூறிய அட்டவணை ஆண்டுதோறும் மதிப்பாய்வு செய்து புதுப்பிக்க வேண்டும்.

(3) பொது அதிகாரி, துணைப்பிரிவு (2)-ன் கீழுள்ள அட்டவணையை மதிப்பாய்வு செய்யும் போது அறிக்கை வாயிலாக, அத்தகைய அட்டவணையில் இருந்து ஏதேனும் பொது சேவையை அகற்றவோ சேர்க்கவோ செய்யலாம்.

ஆனால் அட்டவணையில் உள்ள அத்தகைய விலக்கு அரசின் முன் அனுமதியுடன் இருக்க வேண்டியதாகும்.

(4) அரசு, அவ்வப்போது, மத்திய அரசு பரிந்துரைத்துள்ள மின்-ஆளுமை தரங்களுக்கு பாதகமின்றி, நிர்ணயிக்கப்படும்படியான அத்தகைய முறையில், மின்-ஆளுமை தரத்தை அறிக்கை செய்யலாம்.

7. முதல் மேல் முறையீடு.- (1) பிரிவு 5-ன் துணைப்பிரிவு (5)-ன் அடிப்படையில் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதோ அல்லது குறிப்பிட்ட கால வரம்பிற்குள் பொது சேவை வழங்காததோ அல்லது வழங்கப்பட்ட பொது சேவையில் ஏதேனும் வகையில் குறைவுள்ள எந்தவொரு நபருக்கும், நிராகரிப்பு உத்தரவு பெற்ற தேதி முதல் அல்லது நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடு முடிவடையும்போதோ அல்லது குறைபாடுள்ள சேவையைப் பெற்ற நாளிலிருந்தோ, பிரிவு 5-ன் துணைப்பிரிவு (6)-ன் அடிப்படையில் சேவை பெறாத பட்சத்தில், அதது சங்கதி போல், முப்பது நாட்களுக்குள் முதல் மேல்முறையீட்டு அதிகாரி முன்னிலையில் மேல்முறையீடு செய்யலாம்:

ஆனால், சரியான நேரத்தில் மேல்முறையீடு செய்யாததற்கு மேல்முறையீட்டாளருக்கு போதுமான காரணம் இருந்தது என்று முதல் மேல்முறையீட்டு அதிகாரி உணரும் பட்சத்தில் அந்த அதிகாரிக்கு, முப்பது நாட்கள் முடிவடைந்த பிறகும் மேல் முறையீட்டை ஏற்றுக்கொள்ளலாம்.

(2) முதல் மேல்முறையீட்டு அதிகாரிக்கு நியமிக்கப்பட்ட அதிகாரியிடம் பரிந்துரைக்கப்படும் அத்தகைய காலவரம்பிற்குள் நிர்ணயிக்கப்பட்ட காலவரம்புக்கு மிகாமல் தகுதியுள்ள நபருக்கு பொது சேவை வழங்கவோ அல்லது வழங்கப்பட்ட பொதுசேவையில் உள்ள குறைப்பாடுக்கு தீர்வு காண பரிந்துரைத்ததோ அல்லது எழுத்து பூர்வமான காரணங்களால் மேல்முறையீட்டை தள்ளுபடி செய்யலாம்:

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

ஆனால் துணைப்பிரிவு (2)-ன் அடிப்படையில் ஒரு உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்னர் முதல் மேல்முறையீட்டு அதிகாரி சம்மந்தப்பட்ட தரப்பினருக்கு கூற வேண்டியதை கூற நியாயமாக ஒரு வாய்ப்பு வழங்க வேண்டியதாகும்.

(3) துணைப்பிரிவு (1)-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீடு அதை ஏற்ற முப்பது நாட்களுக்குள் தீர்ப்பு வழங்க வேண்டியதாகும்.

8. இரண்டாவது மேல்முறையீடு.- (1) முதல் மேல்முறையீட்டு அதிகாரியின் உத்தரவால் பாதிக்கப்பட்ட எந்தவொரு நபருக்கும் முதல் மேல்முறையீட்டு உத்தரவு பெற்ற முப்பது நாட்களுக்குள் நிர்ணயிக்கப்படும்படியான கட்டணத்தை கட்டி இரண்டாம் மேல்முறையீட்டு அதிகாரிக்கு மேல்முறையீடு செய்யலாம்:

ஆனால், மேல்முறையீட்டாளர் சரியான நேரத்தில் மேல்முறையீடு செய்யாததற்கு போதுமான காரணம் உள்ளது என்று இரண்டாம் மேல்முறையீட்டு அதிகாரி உணரும் பட்சத்தில் அந்த அதிகாரிக்கு, முப்பது நாட்கள் முடிந்த பிறகு தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடும் ஏற்றக்கொள்ளலாம்.

(2) இரண்டாம் மேல்முறையீட்டு அதிகாரிக்கு நியமிக்கப்பட்ட அதிகாரியிடம் பரிந்துரைக்கப்படும் அத்தகைய காலத்திற்குள் நிர்ணயிக்கப்பட்ட காலவரம்பு மிகாமல் தகுதியுடைய நபருக்கு பொது சேவை வழங்கவோ அல்லது வழங்கப்பட்ட பொதுசேவையின் பற்றாக்குறையை தீர்க்கவோ பரிந்துரைக்கவோ அல்லது எழுத்து பூர்வமாக பதிவு செய்த பிறகு மேல்முறையீட்டை தள்ளுபடி செய்யலாம்:

ஆனால் துணைப்பிரிவு (2)-ன் கீழ் ஒரு உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்னர் இரண்டாம் மேல்முறையீட்டு அதிகாரி சம்மந்தப்பட்ட தரப்பினருக்கு கூற வேண்டியதை கூற நியாயமான ஒரு வாய்ப்பு வழங்க வேண்டியதாகும்.

(3) துணைப்பிரிவு (1)-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு அதை பெற்ற முப்பது நாட்களுக்குள் தீர்ப்பு வழங்க வேண்டியதாகும்.

9. திருத்தம்.- (1) இரண்டாம் மேல்முறையீட்டு அதிகாரியின் உத்தரவால் பாதிக்கப்பட்ட எந்தவொரு நபருக்கும் மேற்கூறிய உத்தரவு தேதி முதல் அறுபது நாட்களுக்குள் திருத்தல் மனு சமர்ப்பிக்க வேண்டியதாகும்:

ஆனால், திருத்தல் மனுவை சரியான நேரத்தில் தாக்கல் செய்யாததற்கு போதுமான காரணம் இருப்பதாக ஆணையம் உணரும் பட்சத்தில் அந்த அதிகாரிக்கு, அறுபது நாட்கள் காலாவதியான பிறகு தாக்கல் செய்த திருத்தல் மனுவை ஏற்றுக்கொள்ளலாம்:

(2) ஆணையத்தின் முடிவு இறுதியானதும் சம்மந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் பாதகமாயிருப்பதுமாகும்.

10. கேரள மாநில சேவை உரிமை ஆணையத்தின் அமைப்பு.- (1) அரசு, இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட தேதிக்கு பிறகு, முடிந்த அளவு விரைவாக, அரசிதழ் அறிக்கை

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

வாயிலாக, ''கேரள மாநில சேவை உரிமை ஆணையம்'' என அழைக்கப்படும் ஒரு நபர் அமைப்பு, இந்த சட்டத்தின் அடிப்படையில் அதற்கு வழங்கியுள்ள அதிகாரங்கள் பயன்படுத்தவும் பொறுப்புகளை செயல்படுத்த வேண்டி, அமைப்பை உருவாக்க வேண்டும்.

(2) ஆணையம் மாநில அரசு செயலாளருக்கு குறையாத பதவி, அல்லது பிற மாநில, மத்திய அரசுகளில் குறைந்தது சமமான பதவி வகிக்கும் நபராக இருக்க வேண்டியதாகும்.

11. ஆணையத்தின் அலுவல் சேவைக்காலம் மற்றும் நிபந்தனைகள்.- (1) ஆணையமாக நியமிக்கப்பட்ட ஒருவர், அவர் பதவியேற்கும் தேதியிலிருந்து மூன்று வருடம் அல்லது 65 வயது அடையும் வரை, எது முதலில் வருகிறதோ அது வரை பதவியில் இருப்பார், மேலும் அவர் மீண்டும் நியமிக்கப்படத் தகுதியற்றவராவர்.

(2) ஆணையம், எந்த நேரத்திலும், அரசுக்கு எழுத்து பூர்வமாக அறிவிப்பதன் மூலம் அவரின் பதவியை ராஜினாமா செய்யலாம்.

(3) அரசு, ஆணையமாக இருக்கும் நபரை பதவியிடத்திலிருந்து, அவர்,-

(எ) ஒரு விடுவிக்கப்படாத திவாலானவராக மாறினால்; அல்லது

(பி) அரசாங்கத்தின் கருத்துப்படி, ஒழுக்கக் கேடுகளை உடைய குற்றத்திற்காக அவர் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டு சிறை தண்டனைக்கு விதிக்கப்பட்டிருந்தால்; அல்லது

(சி) மனநிலை சரியில்லாதவராகவும், தகுதி வாய்ந்த நீதிமன்றம் அவ்வாறு அறிவிக்கவும் செய்தால்; அல்லது

(டி) வேலை செய்ய மறுத்தால் அல்லது வேலை செய்ய இயலாதவரானால்; அல்லது

(இ) அரசு கருத்துப்படி, அவர் அந்த பதவியில் தொடர்வது பொது நலனுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் தனது அதிகாரப் பதவியை தவறாக பயன்படுத்தவோ செய்தால் பதவி நீக்க செய்யப்பட வேண்டியதாகும்.

ஆனால், இந்த துணைப்பிரிவின் கீழ் எந்தவொரு நபரையும் அந்த விஷயத்தில் அவருக்கு கூற வேண்டியதை கூற ஒரு வாய்ப்பு வழங்காமல் பதவி நீக்கம் செய்யக் கூடாது.

(4) ஆணையமாக நியமனம் செய்யப்படும் நபருக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியம் மற்றும் படிகள் அவரது சேவையின் பிற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பரிந்துரைத்தபடி அமையும்.

12. ஆணையத்தின் அலுவலகம், அதிகாரிகள் மற்றும் பிற ஊழியர்கள்- (1) ஆணையத்தின் திறமையான செயல்பாட்டிற்கு தேவையான அலுவலக வசதிகள்,

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அதிகாரிகள் மற்றும் பிற ஊழியர்களை நிர்ணயிக்கும் படியாக அரசு வழங்க வேண்டியதாகும்.

(2) ஆணையத்தின் நோக்கத்திற்காக நியமனம் செய்யப்பட்ட அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு வழங்க வெண்டிய ஊதியம் மற்றும் படிகள் அவர்களின் சேவை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் நிர்ணயிக்கும்படியாக அமையும்.

13. ஊதியம், படிகள் மற்றும் நிர்வாக செலவுகள் மானியத்திலிருந்து வழங்க வேண்டியதாகும்.- ஆணையத்திற்கு வழங்க வேண்டிய ஊதியம் மற்றும் படிகள் பிரிவு 12-ல் குறிப்பிட்டுள்ள அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய ஊதியம், படிகள் மற்றும் ஓய்வூதியம் உட்படயுள்ள நிர்வாக செலவுகள் அரசு பட்ஜட் வாயிலாக அனுமதிக்கப்படும். மானியத்தில் இருந்து வழங்க வேண்டியதாகும்.

14. ஆணையத்தின் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள்.- (1) ஆணையம் பின்வரும் அதிகாரங்களை கொண்டிருக்கும், அதாவது:-

(i) அதன் நடவடிக்கை முறைகளை ஒழுங்குபடுத்த வேண்டும்;

(ii) சட்டத்தின் விதிகளுக்கு ஏற்றவாறு பொது சேவைகளை வழங்கத் தவறினால் தானாக முன்வந்து நடவடிக்கை எடுக்கவோ உகந்ததாக தோன்றும் பட்சம், அத்தகைய வழக்குகளில் உத்தரவு பிறப்பிக்கவோ முடிவெடுக்கவோ செய்வதற்காக முதல் மேல்முறையீட்டு அதிகாரிக்கு அல்லது இரண்டாவது மேல்முறையீட்டு அதிகாரிக்கு பரிந்துரைக்கப்பட வேண்டியதாகும்;

(iii) பொது சேவைகளை வழங்கும் பொறுப்பை ஒப்படைத்துள்ள பொது அதிகாரியின் அலுவலகம் மற்றும் முதல் மற்றும் இரண்டாம் மேல்முறையீட்டு அதிகாரிகளின் அலுவலகங்களை ஆய்வு செய்தல்;

(iv) பிரிவு 4-ன் கீழ் அறிவிக்கப்பட வேண்டிய கூடுதல் சேவைகளைப் பரிந்துரைத்தல் மற்றும் சிறந்த முறையில் செயல்படுத்துவதற்காக இதுவரை வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் திருத்தங்களை பரிந்துரைத்தல்;

(v) இந்த சட்டத்தின் கீழ் பரிந்துரைக்கப்பட்டுள்ள பொறுப்புகளை செயல்படுத்துவதில் தொடர்ந்து நிறைவேற்ற தவறும் நியமிக்கப்பட்ட அதிகாரி அல்லது முதல் மேல்முறையீட்டு அதிகாரி அல்லது இரண்டாவது மேல்முறையீட்டுக்கு எதிராக, உகந்ததாக கருதும் சூழலில், துறை ரீதியான விசாரணையை பரிந்துரைக்கலாம்.

(2) சட்டத்தின் விதிகளின் பொதுதன்மைக்கு பாதகம் ஏற்படாமல், மற்றவற்றுடன், ஆணையத்திற்கு பின்வரும் பொறுப்புகள் இருப்பதாகும், அதாவது:-

(i) பிரிவு 9-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட திருத்தம் பரிசீலனை செய்து தீர்வு செய்தல்;

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(ii) திருத்தம் நிறைவேற்றப்பட்ட உடன் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அந்த உத்தரவின் நகலை வழங்கி அதை ஆணையத்தின் வலைதளத்தில் வெளியிட வேண்டும்;

(iii) சட்டத்தின் விதிகளை முறையாக செயல்படுத்துவதை குறிப்பிட்ட இடைவெளிகளில் கண்காணிக்க வேண்டும்;

(iv) சட்டத்தின் பிரிவு 4-ன் கீழ் அறிக்கை செய்துள்ள வழங்க வேண்டிய சேவைகளின் விவரங்களை காட்சிப்படுத்தல் மற்றும் அத்தகைய சேவைகளை வழங்குவதற்கான கால அட்டவணையை பின்பற்றுதலும் சேவை வழங்கும் முறை மற்றும் தரத்தை கண்காணித்தல்;

(v) மின்னணு முறையில் பொது சேவை கிடைக்காததும் சேவை மின்னணு முறையில் வழங்குவதில் ஏதேனும் குறைபாடுகள் தொடர்பான பொதுமக்களின் புகார்களுக்கு தீர்வு காண ஆலோசனை வழங்குதல்;

(vi) பொதுசேவை வழங்குவது கூடுதல் வெளிப்படைத்தன்மையானதாகவும் திறன் வாய்ந்ததாகவும் குடிமக்கள் நல்லிணக்கமுடையதாகவும் செய்ய பொது சேவை வழங்குவதற்கான நடவடிக்கை முறைகளில் மாற்றங்களை பரிந்துரைத்தல்;

ஆனால் ஆணையம் அத்தகைய பரிந்துரை வழங்குவதற்கு முன்னர் அது தொடர்பான துறை செயலாளருடன் கலந்தாலோசிக்க வேண்டும்;

(vii) பொது ஆணையங்களில் இருந்து சேவைகளைப் பெறுவதில் கிடைத்துள்ள அனுபவம் குறித்து தகுதியுடைய நபர்களில் இருந்து கருத்து அல்லது பதிவை பெறுதல் மற்றும் அவற்றை மதிப்பாய்வு செய்தல்;

(viii) பொது ஆணையங்களில் இருந்து அலுவலகத்தை பரிசோதனை செய்தல் மற்றும் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள காலவரம்பிற்குள் சேவைகள் வழங்கப்படுகிறதா என்பதை உறுதி செய்யவும், ஏதேனும் காலதாமதம் கவனத்திற்கு வந்தால், கடமை தவறியதாகக் கருதி அத்தகைய அதிகாரிகளுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்க நியமன அதிகாரிக்கு பரிந்துரை வழங்குதல்;

(ix) சட்டத்தின் விதிகளை திறம்பட செயல்படுத்துவதற்காக பொது விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தவும் பொது ஆணையங்கள் இந்த சட்டத்தின் கீழுள்ள சேவைகளை வழங்குவதை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளச்செய்தல்;

(x) நிர்ணயிக்கப்படும்படியான வேறு ஏதேனும் கடமைகளை செய்தல்;

15. ஆணையத்தின் உத்தரவுகளை செயல்படுத்துவதற்கான பொது அதிகார சபையின் பொறுப்பு.- ஆணையத்தின் உத்தரவுகள் மற்றும் முடிவுகளை நடைமுறைக்கு கொண்டு வரவும் அவற்றை செயல்படுத்தவும் பொது அதிகார அமைப்பிற்கு பொறுப்பு உள்ளதாகும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

16. மேல்முறையீட்டு அதிகாரிகள் மற்றும் ஆணையத்திடம் உள்ள அதிகாரங்கள்.- இந்த சட்டத்தின் கீழ் உள்ள பொறுப்புகளை செயலாற்றும் மேல்முறையீட்டு அதிகாரிகள் மற்றும் ஆணையம் 1908-ன் சிவில் நடைமுறைச் சட்டத் தொகுப்பில் (1908-ன் 5-வது மத்திய சட்டம்) ஒரு சிவில் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதே அதிகாரங்கள் பின்வரும் விஷயங்கள் தொடர்பானது, அதாவது:-

(எ) எந்தவொரு நபரை வரவழைக்கவும் வருகையை உறுதி செய்யவும்;

(பி) எந்தவொரு ஆவணத்தையும் கண்டறிந்து சமர்ப்பித்தல்

(சி) சத்திய பிரமாணம் அல்லது சத்திய வாக்குமூலம் வாயிலாக சாட்சியங்களைப் பெறுதல்;

(டி) எந்தவொரு பொது ஆவணத்தை கோருதல்;

(இ) சாட்சிகளை விசாரிப்பதற்காக ஆணையத்தை நியமிக்கவும்;

(எஃப்) அதன் உத்தரவுகள், முடிவுகள் மற்றும் பரிந்துரைகளை மறுபரிசீலனை செய்தல்;

(ஜி) நிர்ணயிக்கப்படும்படியான வேறு ஏதேனும் விஷயங்களில் இருப்பதுமாகும்.

17. பொது சேவையை வழங்குவதற்கான கலாச்சாரத்தை வளர்த்தல்.- (1) இந்தச் சட்டத்தின் விதிகள், நியமிக்கப்பட்ட அதிகாரி மற்றும் பொதுசேவை வழங்கும் செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள அவருக்கு கீழுள்ள எந்தவொரு நபரினுடையவும் முதல் மேல்முறையீட்டு அதிகாரியின் சேவை விதிகளின் பகுதியாக கருதப்பட வேண்டியதாகும்.

(2) அனைத்து பொது அதிகார சபையும் தகுதி வாய்ந்த ஒரு நபரிடம் பொது சேவை வழங்குவதற்காக பல்வேறு சான்றிதழ்கள், ஆவணங்கள், சத்திய வாக்குமூலம் போன்றவற்றை சமர்ப்பிக்க வேண்டியதை குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதும் அத்தகைய தகவல்கள் மற்றும் ஆவணங்களை துறைகளில் இருந்தோ அல்லது அது தொடர்பான பொது அதிகார சபையிடம் இருந்தோ நேரடியாக பெறுவதற்கு முயற்சிக்க வேண்டியதாகும்.

(3) ஒவ்வொரு நியமிக்கப்பட்ட அதிகாரியும் முதல் மேல்முறையீட்டு அதிகாரியும் உரிய நேரத்தில் பொது சேவை வழங்குவதை மேம்படுத்தவும் உறுதி செய்யவும், நிர்ணயிக்கப்படும்படியான அத்தகைய முறையில் அவ்வப்போது பயிற்சிக்கு உட்படுத்த வேண்டும்.

18. பொது சேவைகள், நிர்ணயிக்கப்பட்ட காலவரம்பு, நியமிக்கப்பட்ட அதிகாரி மற்றும் மேல்முறையீட்டு அதிகாரிகளின் விவரங்களின் காட்சிபடுத்தல்.- நியமிக்கப்பட்ட அதிகாரி, பொது சேவைகள், நிர்ணயிக்கப்பட்ட கால வரம்பு மற்றும் மேல்முறையீட்டு அதிகாரிகளை குறித்தான விவரங்கள் பொதுமக்களின் அறிவிற்காக அனைத்து பொது

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

ஆணையம் மற்றும் உள்ளூர் அறிவிப்பு பலவகையிலும் அது தொடர்பான பொது ஆணையத்தின் வலைதளத்திலும் வெளியிடப்பட வேண்டியதாகும்.

19. கண்காணிப்பு மற்றும் அறிக்கை சமர்பித்தல்.- (1) ஒவ்வொரு பொது ஆணைய மும், ஒவ்வொரு கலண்டர் ஆண்டின் முடிவிற்கு பிறகு, இந்த சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள சம்மந்தப்பட்ட துறையின் அந்த வருட பொது சேவைகள் குறித்தான விவரங்களை ஒருங்கிணைத்து தயாரிக்க வேண்டியதாகும்.

(2) ஒவ்வொரு துறையும், தங்களுடைய அதிகார வரம்பிற்கு உட்பட்ட பொது ஆணையம் தொடர்பாக, இத்துறையின் கீழ் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு தேவையான தகவலை சேகரித்து வழங்க வேண்டியதும் மேலும் இத்துறையின் தேவைகளுக்காக தகவல் சேகரித்து சமர்ப்பிக்க வேண்டியதும் மேலும் இத்துறைக்காக அத்தகவலை வழங்கி ஆவணங்களை பராமரிப்பது தொடர்பான தேவைகளை பின்பற்ற வேண்டியதாகும்

(3) ஆணையம் ஒவ்வொரு ஆண்டு முடிவடைந்த பிறகும், முடிந்த அளவு விரைவில், சட்டத்தில் உள்ள நிபந்தனைகள் அந்த கலண்டர் ஆண்டில் நடைமுறைக்கு கொண்டு வந்ததின் ஒரு அறிக்கையை தயாரிக்க வேண்டியதும் அதன் ஒரு நகலை அரசுக்கு அனுப்ப வேண்டியதாகும்.

(4) அரசு, முடிந்த அளவுக்கு விரைவாக துணைப்பிரிவு (3)-ல் பெறப்பட்ட அறிக்கையின் ஒரு நகலை சட்டப்பேரவை முன்னிலையில் சமர்ப்பிக்க வேண்டும்.

20. தண்டனை.- (1) நியமிக்கப்பட்ட அதிகாரி அல்லது அத்தகைய சேவையை வழங்கும் செயலில் ஈடுபட்டுள்ள வேறு ஏதேனும் அதிகாரி அல்லது தகுதியான நபருக்கு குறிப்பிட்ட காலவரம்பிற்குள் பொது சேவை வழங்கத் தவறினால் அல்லது பொது சேவை வழங்குவதில் தேவையற்ற தாமதம் ஏற்படுத்தினார் என்றாலோ அல்லது போதுமான மற்றும் நியாயமான காரணமின்றி வழங்கப்பட்ட பொது சேவை ஏதேனும் வகையில் போதுமானதாக இல்லை என்று மேல்முறையீட்டு அதிகாரி உணரும் பட்சம், முதல் மேல்முறையீட்டு அதிகாரியை நியமித்த அதிகாரி அல்லது அத்தகைய பிற அதிகாரிகளின் மீது ஆயிரம் ரூபாய்க்கு குறையாததும் பத்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கக்கூடிய அபராதத்தை விதிக்கலாம்:

ஆனால் அத்தகைய அபராதத்தை விதிப்பதற்கு முன்னர் அது தொடர்பான அதிகாரிக்கு தமது கருத்தை கூற ஒரு நியாயமான வாய்ப்பு அளிக்க வேண்டும்.

(2) பிரிவு (7)-ன் துணைப்பிரிவு (3)-ல் குறிப்பிடப்பட்டுள்ள காலவரம்பிற்குள் போதுமான அல்லது நியாயமான ஒரு காரணம் இல்லாமல் மேல்முறையீட்டை தீர்ப்பதில் முதல் மேல்முறையீட்டு அதிகாரி தேவையற்ற காலதாமதம் ஏற்படுத்தியுள்ளார் என்று இரண்டாம் மேல்முறையீட்டு அதிகாரி உணரும் பட்சத்தில்

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

முதல் மேல்முறையீட்டு அதிகாரியின் மீது இரண்டாயிரம் ரூபாய்க்கு குறையாமலும் பதினைந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கக்கூடிய அபராதத்தை விதிக்கலாம்:

ஆனால் அத்தகைய அபராதம் விதிப்பதற்கு முன்னர் இரண்டாவது மேல்முறையீட்டு அதிகாரி, முதல் மேல்முறையீட்டு அதிகாரிக்கு தமது கருத்தை கூற ஒரு நியாயமான வாய்ப்பு வழங்க வேண்டும்.

(3) பிரிவு (8)-ன் துணைப்பிரிவு (3)-ல் குறிப்பிடப்பட்டுள்ள காலவரம்பிற்குள் போதுமான அல்லது நியாயமான ஒரு காரணம் இல்லாமல் மேல்முறையீட்டை தீர்ப்பு வழங்குவதில் இரண்டாம் மேல்முறையீட்டு அதிகாரி தேவையற்ற காலதாமதம் ஏற்படுத்தியுள்ளார் என்று ஆணையம் உணரும் பட்சம் இரண்டாம் மேல்முறையீட்டாளர் மீது மூவாயிரம் ரூபாய்க்கு குறையாமலும் பதினைந்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கக்கூடிய அபராதத்தை விதிக்கலாம்:

ஆனால் அத்தகைய அபராதம் விதிப்பதற்கு முன்னர் ஆணையம், இரண்டாவது மேல்முறையீட்டு அதிகாரிக்கு தமது கருத்தை கூற ஒரு நியாயமான வாய்ப்பளிக்க வேண்டும்.

(4) பிரிவு 4-ன் கீழ் வழங்கப்பட்டுள்ள விவரங்களை அறிவிக்கத் தவறிய துறைத் தலைவருக்கு எதிராக சட்டத்தின் பிரிவு 18-ன் கீழ் குறிப்பிட்டுள்ளபடியான விவரங்களை காட்சியப்படுத்த தவறிய பொது ஆணைய தலைவருக்கு எதிராகவும் ஆணையத்திற்கு பத்தாயிரம் ரூபாய் வரையிலான அபராதம் விதிக்கலாம்:

ஆனால் அத்தகைய அபராதம் விதிப்பதற்கு முன்னர் துறை தலைவர் அல்லது பொது ஆணைய தலைவருக்கு தமது கருத்தை கூற நியாயமான வாய்ப்பு அளிக்க வேண்டும்.

(5) ஆணையம் அல்லது இரண்டாம் மேல்முறையீட்டு அதிகாரியின் உத்தரவை முதல் முறையீட்டு அதிகாரி கடைபிடிக்கத் தவறியதாகவோ, சட்ட விதிகளை பின்பற்றுவதில் தொடர்ச்சியாக அல்லது தெரிந்தே தவறிழைத்துள்ளனர் என ஆணையம் அல்லது இரண்டாம் மேல்முறையீட்டு அதிகாரி உணரும் பட்சம், அதது சங்கதிபோல், நியமிக்கப்பட்ட அதிகாரி அல்லது முதல் மேல்முறையீட்டு அதிகாரிக்கு எதிராக, கடமை தவறியதாகக் கருதி இந்த பிரிவின் கீழ் விதிக்கப்படும் தண்டனையுடன் அவருக்கு விதிக்கப்பட வேண்டிய சேவை சட்டங்கள் படியான ஒழுங்கு நடவடிக்கை பரிந்துரைக்கலாம்.

21. அபராதத்தை வசூலித்தல் மற்றும் இழப்பீடு வழங்குதல்.- (1) இந்த சட்டத்தின் கீழான பொது சேவை வழங்கும் செயலில் ஈடுபட்டுள்ள நியமிக்கப்பட்ட அதிகாரி அல்லது வேறு ஏதேனும் அதிகாரி மீது விதிக்கப்பட்டுள்ள அபராதம், நிர்ணயிக்கப்பட்டபடியான, அத்தகைய அதிகாரியின் ஊதியத்தில் இருந்தோ

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

ஓய்வூதியத்தில் இருந்தோ அல்லாத பட்சத்தில் பிற சொத்துகளில் இருந்து நிலத்தின் மீதான நில வருவாய் நிலுவையை வசூலிக்கலாம்.

(2) மேல்முறையீட்டு அதிகாரி அல்லது ஆணையம், உத்தரவில் குறிப்பிட்டுள்ள படியான, இந்த சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட மற்றும் வசூலிக்கப்பட்டதுமான அபராதத் தொகையில் இருந்து தகுதியான நபருக்கு அவ்வாறு ஒரு தொகையை உத்தரவு மூலம் இழப்பீடாக வழங்கலாம்.

22. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கான பாதுகாப்பு.- இந்த சட்டத்தின் அடிப்படையிலான நிபந்தனைகளுக்கு ஏற்றவாறு நல்லெண்ணத்தில் நடத்தப்பட்டதோ நடத்த எண்ணியுள்ளதோ ஆன எந்தவொரு விஷயம் தொடர்பாக அரசாங்கத்தில் உள்ள ஏதேனும் அதிகாரி அல்லது ஊழியருக்கு எதிராக அரசாங்கத்தின் முன் அனுமதி இல்லாமல் எந்தவொரு வழக்கு, குற்றச்சாட்டு அல்லது வேறு எந்த சட்ட நடவடிக்கைகள் நிலை நிற்பதில்லை.

23. சட்டம் மிகையான விளைவை கொண்டிருக்கும்.- இந்த சட்டத்தின் விதிகள், அவற்றிற்கு எதிராக தற்போது நடைமுறையில் இருக்கும் வேறு ஏதேனும் சட்டத்தில் அல்லது இந்த சட்டத்தை தவிரவுள்ள வேறு ஏதேனும் சட்டம் முரணாக நடைமுறையில் உள்ள ஏதேனும் ஆவணத்தில் அல்லது ஏதேனும் நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது அதிகார சபையின் ஏதேனும் ஆணை அல்லது உத்தரவில் என்னதான் அடங்கியிருந்தாலும், நடைமுறையில் இருக்கும்.

24. சிவில் நீதிமன்றங்களின் அதிகார வரம்பிற்கு தடை.- இந்த சட்டத்தின் அடிப்படையில் செய்த ஏதேனும் செயல்பாடு எடுத்த ஏதேனும் நடவடிக்கை அரசு அல்லது வேறு ஏதேனும் ஆணையம் அல்லது அதிகாரி இதன் சட்டத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு ஏற்பவோ அதனுடைய அல்லது அவரின் பொறுப்புகள் தொடர்பாக வெளியிடப்பட்ட உத்தரவு அல்லது பரிந்துரை சம்மந்தமான எந்தவொரு வழக்கு அல்லது நடவடிக்கை எடுக்க எந்தவொரு சிவில் நீதிமன்றத்திற்கும் அதிகாரம் இல்லை.

25. சிரமங்களை நீக்கும் அதிகாரம்.- (1) இந்த சட்டத்தின் எந்தவொரு விதிகளையும் நடைமுறைப்படுத்துவதில் ஏதேனும் சிரமம் ஏற்படும் பட்சத்தில், அரசுக்கு, சட்டத்தின் விதிகளுக்கு ஊறு விளைவிக்காமல், உத்தரவு வாயிலாக, அத்தகைய சிரமத்தை அகற்றலாம்:

ஆனால் சட்டம் நடைமுறைக்கு வந்த இரண்டு வருடங்களுக்கு பிறகு அத்தகைய எந்தவொரு உத்தரவும் வெளியிடக்கூடாது.

(2) துணைப்பிரிவு (1)-ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள், அரசு, சட்டபேரவை முன்னிலையில் சமர்ப்பிக்க வேண்டும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

26. விதிகளை உருவாக்குவதற்கான அதிகாரம்.- (1) அரசுக்கு, அதிகாரபூர்வ அறிக்கை மூலம், சட்டத்திலுள்ள விதிகளை நிறைவேற்றுவதற்காக, முந்தைய கால அமலாக்கத்துடன் அல்லது வரும் கால அமலாக்கத்துடன் விதிகளை இயற்றலாம்.

(2) இந்த சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட எந்தவொரு விதியும், அதை இயற்றிய பிறகு, முடிந்த அளவு விரைவாக, சட்டப்பேரவை கூட்டத்தொடரின் போது அதன் முன்னிலையில், ஒரு கூட்டத்தொடரின் அல்லது தொடர்ந்து வரும் இரண்டு கூட்டத்தொடர்களில் உட்படும் படியான மொத்த பதினான்கு நாட்கள் கால அளவிற்கு வைக்க வேண்டியதும் அவ்வாறு அது எந்த கூட்டத்தொடர் அல்லது அடுத்து வரும் கூட்டத்தொடர் முடிவுக்கு வரும்முன், சட்டப்பேரவை, விதிகளில் ஏதேனும் திருத்தம் செய்யவோ அந்த விதி உருவாக்கப்பட வேண்டியதில்லை என்று முடிவெடுக்கும் பட்சம், அந்த விதிக்கு அதன் பிறகு அதது சங்கதி போல், அவ்வாறு திருத்தம் செய்த வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருவதும் அல்லது எந்த வகையிலும் நடைமுறைக்கு வராமல் இருக்கவும் செய்யும்; எனினும், அத்தகைய ஏதேனும் திருத்தம் அல்லது இரத்து செய்தல் அந்த சட்ட அடிப்படையில் முன்னர் செய்யப்பட்ட ஏதேனும் சங்கதியின் செல்லுபடியாதலுக்கு ஊறு விளைவிக்காத வகையில் இருக்க வேண்டியதாகும்.

27. இரத்து செய்தலும் காப்பும்.- (1) 2012-ன் கேரள மாநில சேவை உரிமைச் சட்டம் (2012-ன் 18) இதனால் இரத்து செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு இரத்து செய்த போதிலும் மேற்கூறிய சட்டத்தின் கீழ் செய்த ஏதேனும் காரியமோ எடுத்த ஏதேனும் நடவடிக்கையோ தொடங்கப்பட்டுள்ள ஏதேனும் செயல்முறை இந்த சட்டத்தில் உள்ள விதிகளின் கீழ் செய்ததாகவோ எடுத்ததாகவோ தொடங்கப்பட்டதாகவோ கருதப்பட வேண்டியதாகும்:

ஆனால், இரத்து செய்யப்பட்ட சட்டத்தின்படி வெளியிடப்பட்டதோ உருவாக்கப்பட்டதோ ஆன எந்தவொரு அறிக்கை உத்தரவு அல்லது இந்த சட்டத்தின் நிபந்தனைகளுக்கு முரணாக இல்லாதவரை அவை நடைமுறையில் இருப்பதும் அது இந்த சட்டத்தின் கீழ் இயற்றப்பட்டதோ உருவாக்கப்பட்டதோ ஆன எந்தவொரு அறிக்கை, விதி அல்லது உத்தரவின் படி மாற்றீடு செய்யப்பட்ட போதில், அவை இந்த சட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் இயற்றப்பட்டதோ உருவாக்கப்பட்டதோ ஆக கருதப்பட வேண்டியதாகும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

கேரள அரசு

சட்ட (சட்டமியற்றல் - எ) துறை

அறிக்கை

எண்:30/ச.இ.எ 1/2026/சட்டம். திருவனந்தபுரம், 2026 பெப்ரவரி 19
1201 கும்பம் 7
1947 மாகம் 30

கேரள மாநில சட்டப் பேரவையின் பின்வரும் சட்டம் பொதுமக்களின் அறிவிற்காக இதனால் பிரசுரம் செய்யப்படுகிறது. சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட மசோதாவிற்கு 2026-ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17-ஆம் தேதி ஆளுநரின் அனுமதி கிடைக்கப்பெற்றது.

ஆளுநரின் ஆணைப்படி,

கெ.ஜி.சனல் குமார்,
சட்டச் செயலாளர்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

2026-ன் **2**-வது சட்டம்

2026-ன் கேரள நிதி ஒதுக்கீடு சட்டம்

2025 -2026-ஆம் நிதி ஆண்டின் சேவைகளுக்காக கேரள மாநில தொகுநிதியிலிருந்து மேலும் சில தொகைகளை வழங்குவதற்கும் விநியோகம் செய்வதற்கும் அதிகாரப்படுத்துவதற்கான

ஒரு

சட்டம்

முன்னுரை.-2025-2026 ஆம் நிதி ஆண்டின் சேவைகளுக்காக கேரள மாநில தொகுநிதியிலிருந்து மேலும் சில தொகைகளை வழங்குவதற்கும் விநியோகம் செய்வதற்கும் அதிகாரப்படுத்துவது தேவையாக இருப்பதால்;

இந்திய குடியரசின் எழுபத்து ஏழாம் ஆண்டில் பின்வரும் படியாக சட்டம் இயற்றப்படுகிறது.-

1. சுருக்கத் தலைப்பு.- இந்த சட்டத்திற்கு 2026-ன் கேரள நிதி ஒதுக்கீடு சட்டம் என அழைக்கப்படலாம்.

2. 2025-2026 ஆம் நிதி ஆண்டிற்கு கேரள மாநில தொகுநிதியிலிருந்து 33833,99,28,000 ரூபாய் வழங்குதல்.- 2025-2026 நிதியாண்டில், வந்து சேரும் பல்வேறு செலவுகளை எதிர்கொள்வதற்காக அட்டவணையின் (2)-வது கட்டத்தில் குறிப்பிட்டுள்ள சேவைகள் மற்றும் தேவைகள் தொடர்பாக அட்டவணையின் (3)-வது கட்டத்தில் குறிப்பிடப்பட்டதற்கு மிகாததும் மொத்தம் முப்பத்து மூவாயிரத்தி எண்ணூற்றி முப்பத்து மூன்று கோடி தொண்ணூற்றி ஒன்பது லட்சத்து இருபத்து எட்டாயிரம் ரூபாய் மட்டும் வருவதுமான தொகைகள் கேரள மாநில தொகுநிதியிலிருந்து வழங்கவும் விநியோகிக்கவும் செய்யலாம்.

3. நிதி ஒதுக்கீடு.- இந்த சட்டத்தின் படி கேரள மாநில தொகுநிதியிலிருந்து வழங்கவும் விநியோகிக்கவும் செய்வதற்கு அதிகாரப்படுத்தப்பட்டுள்ள தொகைகள் 2025-2026-ஆம் நிதி ஆண்டு தொடர்பான அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சேவைகள் மற்றும் தேவைகளுக்காக விநியோகிக்கப்பட வேண்டும்.

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

அட்டவணை

(பிரிவுகள் **2** மற்றும் **3** பார்க்கவும்)

1		**2**		**3**		
				மிகக் கூடாத தொகைகள்		
வரிசை எண்	தேவை எண்	பணிகளும் தேவைகளும்		சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப் பட்டது (ரூபாய்)	தொகு நிதியில் கட்டணம் சுமத்தப் பட்டது (ரூபாய்)	மொத்தம் (ரூபாய்)
1	I	மாநில சட்டப்பேரவை	வருவாய்	8,12,28,000	13,00,000	8,25,28,000
2	II	மாநில ஆட்சி தலைவர்கள் அமைச்சர்கள் மற்றும் தலைமையிட அலுவலர்கள்	வருவாய்	10,00,01,000	..	10,00,01,000
3	III	நீதி நிர்வாகம்	வருவாய்	160,89,94,000	13,26,20,000	174,16,14,000
4	IV	தேர்தல்கள்	வருவாய்	242,42,25,000	..	242,42,25,000
5	VIII	ஆயத்துறை	வருவாய்	2,45,27,000	..	2,45,27,000
6		கடன் சுமைகள்	வருவாய்	..	221,58,31,000	221,58,31,000
7	XI	மாவட்ட ஆட்சியும் பலவகையும்	வருவாய்	28,92,32,000	..	28,92,32,000
8	XII	காவல்	வருவாய் மூலதனம்	25,58,05,000 48,00,01,000	.. ..	25,58,05,000 48,00,01,000
9	XIII	சிறைகள்	வருவாய்	21,47,70,000	..	21,47,70,000
10	XIV	எழுதுபொருட்கள், அச்சடி மற்றும் நிர்வாக பணிகள்	வருவாய்	..	8,87,000 ..	8,87,000
11	XV	பொதுப்பணி	மூலதனம்	1,000	65,60,62,000	65,60,63,000
12	XVI	ஓய்வூதியம் மற்றும் பல வகையும்	வருவாய்	6891,15,79,000	1,90,78,000	6891,06,57,000

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(1)		(2)		(3)		
				மிகக் கூடாத தொகைகள்		
வரிசை எண்	தேவை எண்	பணிகளும் தேவைகளும்		சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப் பட்டது (ரூபாய்)	தொகுநிதியில் கட்டணம் சுமத்தப் பட்டது (ரூபாய்)	மொத்தம் (ரூபாய்)
13	XVII	கல்வி, விளையாட்டு, கலை மற்றும் கலாச்சாரம்	வருவாய் மூலதனம்	1,000 148,31,54,000	3,54,84,000 45,82,000	3,54,85,000 148,77,36,000
14	XVIII	மருத்துவ உதவி மற்றும் பொது சுகாதாரம்	வருவாய் மூலதனம்	1164,37,38,000 187,19,52,000	25,97,000 43,80,000	1164,63,35,000 187,63,32,000
15	XIX	குடும்ப நலம்	வருவாய்	230,44,02,000	78,000	230,44,80,000
16	XX	குடிநீர் வினியோகம் மற்றும் துப்புரவு	மூலதனம்	4497,68,00,000	..	4497,68,00,000
17	XXII	நகர மேம்பாடு	மூலதனம்	104,59,35,000	24,94,39,000 ..	129,53,74,000
18	XXIII	தகவல்தொடர்பு மற்றும் பிரச்சாரம்	வருவாய்	132,83,50,000	.. ..	132,83,50,000
19	XXIV	தொழில் மற்றும் தொழிலாளர் நலம், அயல்நாட்டுவாழ் மலையாளிகள் நலனும்	வருவாய்	1,000	..	1,000
20	XXV	அட்டவணை சமுதாயம்/ பழங்குடியினர்/பிற பிற்படுத்தப் பட்டோர்/ சிறுபான்மையோர் பிரிவுகளின் நலன் உட்பட்ட சமூக நலன்	வருவாய் மூலதனம்	607,58,51,000 ..	.. 52,35,000	607,58,51,000 52,35,000

(1)		(2)		(3)		
				மிகக் கூடாத தொகைகள்		
வரிசை எண்	தேவை எண்	பணிகளும் தேவைகளும்		சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப் பட்டது (ரூபாய்)	தொகுநிதியில் கட்டணம் சுமத்தப் பட்டது (ரூபாய்)	மொத்தம் (ரூபாய்)
18	XVII	கல்வி, விளையாட்டு, கலை மற்றும் கலாச்சாரம்	வருவாய் மூலதனம்	260,38,89,000 216,19,74,000	1,91,69,000 79,41,000	262,30,58,000 216,99,15,000
19	XVIII	மருத்துவ உதவி மற்றும் பொது சுகாதாரம்	வருவாய் மூலதனம்	397,62,38,000 327,13,99,000	5,000 1,38,000	397,62,43,000 327,15,37,000
20	XIX	குடும்ப நலம்	வருவாய்	197,24,39,000	1,00,000	197,25,39,000
21	XXVI	இயற்கை சீற்ற மீட்பு நடவடிக்கை	வருவாய்	126,84,30,000	..	126,84,30,000
22	XXVII	கூட்டுறவு	வருவாய்	1,000	..	1,000
23	XXVIII	பலவகை பொருளாதார பணிகள்	வருவாய் மூலதனம்	3,32,00,000 807,81,36,000	..	3,32,00,000 807,81,36,000
24	XXIX	வேளாண்மை	வருவாய் மூலதனம்	.. ..	2,56,000 3,72,000	2,56,000 3,72,000
25	XXX	உணவு	வருவாய்	132,63,64,000	20,09,000	132,83,73,000
26	XXXII	பால்பண்ணை மேம்பாடு	மூலதனம்	1,000	..	1,000
27	XXXIII	மீன்பிடித்தல்	வருவாய் மூலதனம்	58,71,47,000 106,64,89,000	.. 5,29,58,000	58,71,47,000 111,94,47,000

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(1)	(2)		(3)		
			மிகக் கூடாத தொகைகள்		
வரிசை எண்	தேவை எண்	பணிகளும் தேவைகளும்	சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப் பட்டது (ரூபாய்)	தொகுநிதியில் கட்டணம் சுமத்தப் பட்டது (ரூபாய்)	மொத்தம் (ரூபாய்)
28	XXXIV	வனம் வருவாய்	..	5,56,000	5,56,000
29	XXXV	பஞ்சாயத்து வருவாய்	22,85,70,000	..	22,85,70,000
		மூலதனம்	809,10,72,000	..	809,10,72,000
30	XXXVII	தொழிற்சாலைகள் வருவாய்	9,14,13,000	..	9,14,13,000
		மூலதனம்	55,16,48,000	1,09,44,000	56,25,92,000
31	XXXVIII	நீர்பாசனம் மூலதனம்	..	7,35,16,000	7,35,16,000
32	XXXIX	மின்திட்டங்கள் வருவாய்	22,13,85,000	..	22,13,85,000
		மூலதனம்	50,59,04,000	..	50,59,04,000
33	XL	துறைமுகங்கள் மூலதனம்	754,33,29,000	..	754,33,29,000
34	XLI	போக்குவரத்து மூலதனம்	2055,25,04,000	1,67,63,000	2056,92,67,000
35	XLII	சுற்றுலா மூலதனம்	52,71,70,000	..	52,71,70,000

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

(1)		(2)		(3)			
				மிகக் கூடாத தொகைகள்			
வரிசை எண்	தேவை எண்	பணிகளும் தேவைகளும்		சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப் பட்டது (ரூபாய்)	தொகுதிநிதியில் கட்டணம் சமத்துப் பட்டது (ரூபாய்)	மொத்தம் (ரூபாய்)
36		பொதுக்கடன் திரும்ப செலுத்துதல்	மூலதனம்	..	12962,80,00,000	12962,80,00,000
37	XLV	பலவகை கடன்களும் மற்றும் முன்னீடு	மூலதனம்	240,00,00,000	..	240,00,00,000
38	XLVI	சமூக பாதுகாப்பு மற்றும் நலன்	வருவாய்	702,39,96,000	..	702,39,96,000
			மூலதனம்	96,75,000	..	96,75,000
			மொத்தம்	**20522,69,81,000**	**13311,29,47,000**	**33833,99,28,000**

PUBLISHED BY THE SUPERINTENDENT OF GOVERNMENT PRESSES
AT THE GOVERNMENT CENTRAL PRESS, THIRUVANANTHAPURAM, 2026

This is a digitally signed Gazette.
Authenticity may be verified through https://compose.kerala.gov.in/

Digitally signed by VEERAN T
Date:2026.05.12 04:26:46 +05:30